**Regional Language - Tamil**

## எப்படி விண்ணப்பிப்பது (ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை)

**படிப்படியான செயல்முறை:**

**1. ஆதாருடன் இணைக்கப்பட்டிருக்கும் மொபைல் எண்**
உங்களுடைய சமீபத்திய மொபைல் எண் உங்கள் ஆதாருடன் இணைக்கப்பட்டிருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள், ஏனென்றால் பதிவு செய்யும்போது அந்த எண்ணானது OTP மூலம் சரிபார்க்கப்படும்.

**2. ஆதாரில் இருக்கும் சமீபத்திய புகைப்படம்**
இ-ஆதார் (e-Aadhaar) அல்லது ஆஃப்லைன் ஆதார் (Offline Aadhaar) XML-ஐ பதிவிறக்கம் செய்வதற்கு முன்பு, ஆதாரில் உங்களுடைய சமீபத்திய புகைப்படத்தைப் புதுப்பிக்கவும். விண்ணப்பதாரருடைய விண்ணப்பத்தை அங்கீகரிக்கும் போது இது ரெஜிஸ்டாரரர் யூசரால் சரிபார்க்கப்படும்.

**3. ஆஃப்லைன் ஆதார் XML ஃபைல் ஐ டவுன்லோட் செய்யவும்**
https://myaadhaar.uidai.gov.in/offline-ekyc என்ற இணைப்பைப் பார்வையிடவும், உங்களுடைய ஆஃப்லைன் ஆதார் XML ஐ உருவாக்கிய பிறகு, மேலும் உங்கள் விருப்பப்படி ஒரு "பகிர்வுக் குறியீட்டை" செட் செய்யவும்.

**4.புதிய பயனரை (யூசரை) உருவாக்கவும்**
https://uidai.nseitexams.com/UIDAI/LoginAction_input.action என்ற

லிங்கிற்குச் செல்லவும், அங்கே உங்களுடைய ஆஃப்லைன் ஆதார் XML ஃபைல் ஐ அப்லோட் செய்யவும், பகிர்வுக் குறியீடு மற்றும் மொபைல் எண்ணை (ஆதாரில் இருப்பதுபடி) உள்ளிட்டு, பதிவு செய்யவும்.

**5.OTP ஐ சரிபார்த்தல் பிறகு ஒத்துக்கொள்ளுதல்**

ஆதார் மற்றும் மொபைல் எண்ணை வெற்றிகரமாக சரிபார்த்த பிறகு, உங்களுடைய மொபைல் எண்ணுக்கு ஒரு OTP அனுப்பப்படும். தேர்வு நோக்கங்களுக்காக உங்களுடைய ஆதார் டேட்டாவைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்க அந்த OTP ஐ உள்ளிடவும்.

**6. பதிவுச் சான்றுகளைப் பெறுங்கள்**

பதிவு (ரெஜிஸ்ட்ரேசன்) ID மற்றும் டிஃபால்ட் பாஸ்வேர்ட் ஆனது, நீங்கள் ஏற்கனவே பதிவு செய்து வைத்திருக்கும் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும். முதல் முறை லாகின் செய்யும்போது பாஸ்வேர்டை மாற்றி விடவும், இதனால் உங்களுடைய ஆதாரச்சான்றுகள் எதிர்காலத்தில் பயன்படுத்தும்போது பத்திரமாகப் பாதுகாக்கப்படும்.

**7.விண்ணப்பப் படிவத்தை நிரப்பிய பிறகு சமர்பிக்கவும்**

- உங்களுடைய பதிவு (ரெஜிஸ்ட்ரேசன்) ID மற்றும் புதிய பாஸ்வேர்ட் உடன் லாகின் செய்யவும்
- ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் ஆதார் விவரங்களை சரிபார்க்கவும்
- எண்டர் செய்யவும்: கல்வி பற்றிய விபரங்கள், தேர்வு நிலை, தேர்விற்கான மொழி, என்ரோல்மெண்ட் ஏஜென்சி குறியீடு, விரும்பிய தேர்வு மையம் பற்றிய விபரங்கள் மற்றும் LMS விபரங்கள்
- அப்லோட்” கல்வி மற்றும் LMS ஆவணங்கள்

- நிரப்பவும்: கேள்வித்தாள் பிரிவு
- சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டாரரின் ஒப்புதலுக்காக விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்

**8. ரெஜிஸ்டாரர் ஒத்துக்கொள்வதற்கான காலக்கெடு**

- விண்ணப்பமானது 30 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும், இல்லையென்றால் அது தானாகவே நிராகரிக்கப்பட்டுவிடும்.
- விண்ணப்பதாரருடைய விண்ணப்பம் ஒரே ரெஜிஸ்டாரரால் மூன்று முறை நிராகரிக்கப்பட்டால், அந்த ரெஜிஸ்டாரரால் இனி அந்த விண்ணப்பதாரர் மீண்டும் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்

**9.பணத்தைச் செலுத்துங்கள்**

அனுமதிக்கப்பட்ட பிறகு, விண்ணப்பதாரர் 30 நாட்களுக்குள் "பேமெண்ட்" என்ற டேப் மூலமாகப் பணம் செலுத்த வேண்டும். அப்படி செய்யத் தவறினால் தானாகவே நிராகரிக்கப்பட்டுவிடும்.

**பணம் செலுத்துவதற்கான முறைகள்:**

- ஆன்லைன்: UPI, கிரெடிட்/டெபிட் கார்டு, நெட் பேங்கிங்
- ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டுவிட்டது: ரெஜிஸ்டாரர்/EA மூலம் ஆஃப்லைனில் பணம் செலுத்திய விண்ணப்பதாரர்களுக்கு

**11.பணம் கட்டியதற்கான ரசீதை டவுன்லோட் செய்யவும்**

பணமானது வெற்றிகரமாக செலுத்தப்பட்டுவிட்டது, பணம் கட்டியதற்கான ரசீதை டவுன்லோட் செய்துவிட்டு சேவ் செய்து கொள்ளவும்.

**12.மோக் (மாதிரி) தேர்வு மற்றும் ஸ்லாட்டை முன்பதிவு செய்தல்**

- டெஸ்ட் இன்டர்ஃபேஸைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு மோக் தேர்வை முயற்சி செய்யவும்
- சீட் புக்கிங் பக்கத்தை அணுகி உங்களுடைய தேர்வு மையம் மற்றும் தேர்விற்கான ஸ்லாட்டைத் தேர்ந்தெடுக்கவும்

**13.தேர்விற்கான ஸ்லாட் (எக்ஸாம் ஸ்லாட்) செல்லுபடியாகும் காலம்**

பணம் வெற்றிகரமாக செலுத்தப்பட்ட நாளிலிருந்து 180 நாட்களுக்குள் தேர்வை திட்டமிட வேண்டும். அப்படி செய்யத் தவறினால் தானாகவே நிராகரிக்கப்படுவதோடு கட்டணமும் பறிமுதல் செய்யப்படும்.

**14.தானாகவே நிராகரிக்கப்படுவதை சரியாகக் கையாளுதல்**

ஒருவேளை தானாகவே நிராகரிக்கப்பட்டுவிட்டால், விண்ணப்பதாரர் மீண்டும் புதிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தபிறகு, ஒப்புதலைப் பெற வேண்டும், பிறகு புதிதாக கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**15.அட்மிட் கார்டை டவுன்லோட் செய்யவும்**

வெற்றிகரமாக ஸ்லாட்டை புக் செய்த பிறகு, உங்களுடைய அட்மிட் கார்டை டவுன்லோட் செய்யவும், அதில் பின்வருபவை அடங்கும்:

- தேர்வு மைய இடம் பற்றிய விபரங்கள்
- தேர்விற்கான தேதி மற்றும் நேரம்
- பிற முக்கியமான வழிமுறைகள்

**16. விருப்பமான இடத்தில் ஸ்லாட் கிடைக்கவில்லை என்றால், கீழே இருக்கும் குறிப்பைக் கவனியுங்கள்:**

- வெற்றிகரமாக பணம் செலுத்திய பிறகு 7 நாட்கள் வரைக்கும் காத்திருக்கவும்

- ஸ்லாட்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றால், uidai_admin@nseit.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்
- இது இன்னமும் தீர்க்கப்படாவிட்டால், UIDAI தலைமையகம் - பயிற்சி, சோதனை மற்றும் சான்றிதழ் பிரிவுக்கு புகாரைத் தெரிவிக்கவும்

17. ஒரு விண்ணப்பதாரர் தேர்வில் தோல்வியடைந்தாலோ அல்லது தேர்வில் கலந்து கொள்ளவில்லை என்றாலோ, அவர்களுடைய அங்கீகார காலம் காலாவதியாகிவிட்டாலோ, அவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு ஒரு புதிய விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு:** அங்கீகாரக் காலம் ரெஜிஸ்டாரர் ஒத்துக் கொண்ட தேதியிலிருந்து 30 நாள் கால அவகாசமாகக் கொடுக்கப்படும்.

18. ரெஜிஸ்டாரர் ஒப்புதல் அளித்த 30 நாட்களுக்குள் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். தோல்வியடைந்து விட்டாலோ அல்லது காலாவதியான பிறகு தேர்வில் கலந்து கொள்ளாவிட்டாலோ, புதிய விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

**19.** தோல்வியடைந்த மற்றும் தேர்வில் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரர்கள் மீண்டும் தேர்வு எழுதுவதற்கான விதிமுறைகள்

- பாதி கட்டணத்துடன் 3 முறை மீண்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறது
- 3 முறை மீண்டும் முயற்ஸி செய்த பிறகு, முழு கட்டணம் மீண்டும் வசூலிக்கப்படும்
- ஒவ்வொரு முறையும் புதிய சான்றிதழ் பெற முயற்சிக்கும்போது சுழற்சியானது மீண்டும் நடக்கும்.

**19. பணத்தைத் திரும்பப் பெறும் பாலிசி இல்லை**

பணத்தை செலுத்திய பிறகு அது மீண்டும் திரும்பப் பெறப்படாது.

ஒருவேளை நீங்கள் செலுத்திய கட்டணம் தோல்வியடைந்துவிட்டால், uidai_admin@nseit.com என்ற மின்னஞ்சலுக்கு தொடர்பு கொள்ளவும்

**20.கட்டணம் செல்லுபடியாகும் காலம்**

சான்றிதழுக்கு கட்டணம் செலுத்திய நாளிலிருந்து 180 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

**21.** தேர்வு எழுதும் நாளில் தேவைப்படும் ஆவணங்கள்

விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக எடுத்துச் செல்ல வேண்டியவை:

1. அவர்களுடைய இ-ஆதாரின் சமீபத்திய நகல் (https://myaadhaar.uidai.gov.in/genricDownloadAadhaar/en இலிருந்து டவுன்லோட் செய்யப்பட்டது) அல்லது mAadhaar / ஆதார் PVC அட்டை அல்லது சமீபத்திய புகைப்படத்துடன் கூடிய ஆதார் கடிதம்

2.போர்ட்டலின் கீழே காட்டப்படும் அட்மிட் கார்டு

குறிப்பு: அட்மிட் கார்டில் இருக்கும் புகைப்படம் பொருந்தாவிட்டாலோ அல்லது அட்மிட் கார்டு கிடைக்காத பட்சத்தில், விண்ணப்பதாரர் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

**22.ஆதரவு**

பதிவு (ரெஜிஸ்ட்ரேசன்), விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல், தேர்வு கட்டணம், தேர்வு மையம்/தேர்வு இடம் மற்றும் தேர்வு & சான்றிதழ் விண்ணப்பம்" போன்றவற்றிற்கான ஏதாவதொரு கேள்விகளுக்கு, விண்ணப்பதாரர் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்:

**தொலைபேசி எண் - 022-42706508**

**நேரம் - (திங்கள்-சனி, காலை 9:30-மாலை 6:00 மணி)**

**மின்னஞ்சல் - uidai_admin@nseit.com**

**UIDAI ஆதரவு (சான்றிதழ்க்குப் பின்)**

**UIDAI இன் ஆதரவு (சான்றிதழ் பதிவுக்குப் பிறகானது)**

சான்றிதழில் "செயலிழப்பு, பெயர்/UID/ஆதார் எண். பொருந்தவில்லை"" போன்ற ஏதாவதொரு சிக்கல்களுக்கு, விண்ணப்பதாரர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்:

- o Toll free: 080-23099400
- o கட்டணமில்லா தொலைபேசி எண்: 080-23099400

**Timing : 9:30 AM - 6:00 PM (Monday -Saturday)**

**நேரம்: காலை 9:30 - மாலை 6:00 (திங்கள் - சனி)**

விண்ணப்பதாரர்கள் தங்களுடைய கேள்விகளை techsupport@uidai.net.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம்.